# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில் 15.02.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களின் சம்பவங்கள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவற்றை எடுத்துக் கூறும் தொடரை ஆரம்பித்திருக்கின்றேன். அவற்றை பல தலைப்புகளில் நான் கூறி வந்தேன். இன்றைய குத்பா இந்தத் தொடரின் இறுதி குத்பாவாக இருக்கும். நான் சம்பந்தப்பட்ட நபர்களிடம் இந்த அறிவிப்புகளின் பதிவேட்டை செக் செய்யுங்கள். அதில் ஏதாவது அறிவிப்புகள் எஞ்சியிருந்தால் இன்னொரு சமயத்தில் அவை எடுத்துக் கூறப்படும் என்று கூறியுள்ளேன். தற்செயலாக இந்த அறிவிப்புகள் பிப்ரவரி மாதத்தில் முடிவடைவது அழகிய பொருத்தமாக இருக்கின்றது. மேலும் எந்த அறிவிப்புகளுடன் இந்தத் தொடர் முடிவடைகின்றதோ அவற்றிற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடன் தொடர்பு இருக்கின்றது. இப்படிப்பட்ட ஓரிரு அறிவிப்புகளை நான் கடந்த குத்பாவில் எடுத்துக் கூறியிருந்தேன்.

இன்று ஏறக்குறைய எல்லா அறிவிப்புகளும், கனவுகளும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடன் தொடர்புடையது ஆகும். ஐந்து நாட்களுக்குப் பிறகு முஸ்லிஹ் மவ்வூது தினம் கொண்டாடப்படுகிறது. அது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது பிறந்த தினம் என்பதால் கொண்டாடப்படுவதில்லை. மாறாக பிப்ரவரி மாதம் 20 ம் தேதி முஸ்லிஹ் மவ்வூது தொடர்பான முன்னறிவிப்பு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக செய்யப்பட்டது. இந்த நாள் அந்த முன்னறிவிப்பு நிறைவேறிய நாளாகும். மேலும் இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மைக்கான ஆதாரமாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது பிறப்பு பிப்ரவரி மாதம் 20ம் தேதி நிகழவில்லை. எவ்வாறிருப்பினும், நான் எடுத்துக் கூறவிருக்கின்ற இந்த அறிவிப்புகளில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது கிலாஃபத் தொடர்பாக அல்லாஹ் மக்களுக்கு ஆறுதலை வழங்கியிருந்தான். இதற்கு முன்னர் லாஹுரிகளுடன் இருந்தவர்களுக்கு அல்லாஹ் மீண்டும் வழிகாட்டினான். அவர்கள் மீண்டும் பைஅத் செய்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் வாழ்ந்த அந்தக் காலக்கட்டம் மிகவும் கடினமான கவலைகள் நிறைந்த காலக்கட்டமாக இருந்தது. ஆரம்ப நாட்களிலேயே இந்தக் குழப்பம் தலைதூக்கியது. பிறகு அவர்களது கிலாஃபத் சமயத்திலும் அது இருந்து வந்தது. பெரும் பெரும் ஆலிம்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் ஜமாஅத்தை விட்டு விலகிச் சென்று விட்டார்கள். அவர்கள் கருவூலங்களை எடுத்துச் சென்றனர். பிறகு பல சமயங்களிலும் உட்புற மற்றும் வெளிப்புற குழப்பங்கள் தலைதூக்கின. ஆனால் எல்லா சந்தர்ப்பத்திலும் அல்லாஹ்வின் உதவி அவர்களுடன் இருந்தது. இந்த உறுதிமிக்க எண்ணம் கொண்ட மனிதர் ஒவ்வொரு குழப்பத்தையும் கடினமான நிலைமையையும் வீரத்துடன் எதிர்த்து நின்றார்கள். அல்லாஹ் அருள் செய்தான். இறுதியில் அந்த ஜமாஅத் முன்னேற்றத்தைப் பெற்றது. இன்று அது எப்படி முன்னேறுகிறது என்பதை நாம் பார்க்கின்றோம். அத்துடன் இறைவனின் உதவி இருந்தது. அந்த ஜமாஅத்திலிருந்த மக்கள் கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். இப்போது இன்று நான் கூற வேண்டிய அறிவிப்புகளைக் கூறுகின்றேன்.

1894 ஆம் ஆண்டு பைஅத் செய்த **ஹஸ்ரத் சேக் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப்** அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் இந்தக் கனவை ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்களின் வாழ்நாளில் பார்த்தேன். அது ஹஸ்ரத் மஹ்மூது அவர்களின் கிலாஃபத் தொடர்பானதாகும். ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்கள் காயமடைந்து

நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். இரத்த அழுத்தம் காரணமாக அல்லது வேறு காரணங்களினால் உடலில் வீக்கம் ஏற்பட்டிருந்தது. வயிற்றில் கோளாறும் இருந்தது. எவ்வாறிருப்பினும் அவர்கள் இந்த நோயால் துன்புற்றிருந்த சமயத்தில் நான் மஹ்மூதின் கைகளில் எனது கையை வைத்தவாறு நான் உங்களது முதல் அடிமை ஆவேன் என்று கூறினேன். அப்போது அவர்கள் என்னிடம் எனக்குப் புரியவில்லை என்று கூறினார்கள். ஹஸ்ரத் சேக் யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி அவர்கள் தனக்கு இல்ஹாம் மூலமாகவும், கனவுகள் மூலமாகவும் நாம் மஹ்மூதை கலீஃபா ஆக்கி விட்டோம் என்று கூறப்பட்டதாக கூறினார்கள்.

**ஹஸ்ரத் அமீர் முஹம்மது கான் சாஹிப்** அவர்களது அறிவிப்புகளை கடந்த அறிவிப்புகளின் போதும் படித்துள்ளேன். அமீர் கான் சாஹிப் என்று பெயரைப் படித்தேன். இவர்களது உறவினர் ஒருவர் இவரது பெயர் அமீர் முஹம்மது கான் சாஹிப் என்று தெரிவித்துள்ளார். அறிவிப்புகளில் ஆரம்பத்தில் அவற்றை எழுதியவர் அமீர் கான் என்றே எழுதியுள்ளார். அறிவிப்புளில் இவர்களது ஒரு கடிதம் பற்றி கூறப்பட்டிருக்கின்றது. அந்தக் கடிதம் மூலமாக இவர்களது அசல் பெயர் அமீர் முஹம்மது கான் ஆகும் என்று தெரிய வருகிறது. இவர்கள் 1903 ஆம் ஆண்டில் பைஅத் செய்தார்கள். இவர்கள் கூறுகின்றார்கள்:

1913 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ம் தேதி கனவில் மரம் ஒன்றைக் கண்டேன். அதில் பெரிய பெரிய உலர்ந்த காய்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அதன் சலசலப்பு, மிகுந்த இரைச்சலாக இருந்தது. எவரது குரலையும் கேட்க முடியாத அளவுக்கு கூச்சல் இருந்தது. அப்போது அல்லாஹ் மழை பொழியும்படி செய்தான். அதன் விளைவாக காய்ந்து போயிருந்த எல்லா காய்களும் உதிர்ந்து விட்டன. அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கனவிலேயே சய்த்தானின் வீடு சீர்குலைந்து விட்டது; அழிந்து விட்டது. இப்போது பூமியிலிருந்து பசுமையான தளைகள் முளைக்கும். வெற்றி பிறக்கும். கனிகள் உருவாகும் என்று கூறினார்கள். சிலர் இந்தக் காய்ந்து போன காய்களை சுட்டிக்காட்டியவாறு நீங்கள் இவற்றை சய்த்தானின் வீடு என்று ஏன் கூறினீர்கள் என்று கேட்டார்கள். இதற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், இவற்றை நான் மட்டும் சய்த்தானின் வீடு என்று கூறவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இவற்றை சய்த்தானின் வீடு என்றே கூறியுள்ளார்கள் என்று கூறினார்கள். இதற்குப் பிறகு நான், ஹகீம் முஹம்மது உமர் சாஹிப் அவர்கள் உரத்த குரலில் ஹஸ்ரத் சாஹிப் அவர்களது முன்னறிவிப்புகளை மக்களுக்கு கூறுவதைப் பார்த்தேன். கனவிலேயே இவ்வாறு பார்க்கின்றார். அந்த முன்னறிவிப்புகள் நிறைவேறி விட்டன. எதிர்காலத்தில் செய்ய இருக்கின்ற முன்னறிவிப்புகளின் உண்மைக்கு ஆதாரமாக இதனை அவர்கள் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார்கள். அதைக் கேட்டதினால் கேட்பவர்களது உள்ளத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்ஹம்துலில்லாஹ்! இரண்டாவது கலீஃபா அவர்களது கிலாஃபத் உருவானதன் மூலம் இந்தக் கனவு அப்படியே நிறைவேறி விட்டது. கிலாஃபத்துடன் கருத்து வேறுபாடு கொண்டு கூச்சலை ஏற்படுத்தியிருந்த மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்கள் தமது தோழர்களுடன் ஜமாஅத்தை விட்டு விலகிச் சென்றார்கள். காதியானை விட்டு வெளியேறி விட்டார்கள். அவர்கள் வெளியேறிய பிறகு அஹ்மதிய்யத் இரண்டாவது கிலாஃபத் மூலமாக முழு உலகிலும் பரவி விட்டது.

**ஹஸ்ரத் அமீர் முஹம்மது கான் சாஹிப்** அவர்களே கூறுகின்றார்கள்:

1912 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் தேதி புதன்கிழமை இரவு கனவில் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் என்னிடம், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த முன்னறிவிப்பிற்கேற்ப வாக்களிக்கப்பட்ட அந்த அருளுக்குரிய நபர் வரும்போது அவர் சிம்மாசனத்தில் அமர வைக்கப்படுவார் என்று கூறினார்கள். முதல் கலீஃபா அவர்களின் வாழ்நாளில் இந்தக் கனவை இவர்கள் பார்த்துள்ளார்கள். இதற்கு நாங்கள் ஐந்தாவது ஜார்ஜ் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ளார் என்பதை விளக்கமாக எடுத்துக் கொண்டோம். ஆனால் இப்போது தான் வாக்களிக்கப்பட்ட அருளுக்குரிய நபர் சாஹிப் ஸாதா மியான் மஹ்மூது அஹ்மது என்பது தெரிய வந்தது. சிம்மாசனத்தில் அமர்வது என்பது அவர்களது கிலாஃபத் ஆகும். பிறகு அவர்களது கிலாஃபத்தின் காலக்கட்டத்தில் வானம் மற்றும் பூமியிலிருந்தும் மிகவும் வலுவான அடையாளங்கள் தோன்ற வேண்டுமே! என்று எண்ணினேன். பிறகு அடையாளமும் நிறைவேறி விடும் என்பது

புரிய வந்தது. பிறகு சாஹிப்ஸாதா சாஹிப் அவர்களது கிலாஃபத் பற்றி கூறும் போது ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்களது முகம் மகிழ்ச்சியில் திளைத்திருந்தது. அப்போது நானும் மகிழ்ச்சி அடைந்து வாக்களிக்கப்பட்ட அந்த அருளுக்குரிய நபர் வெகு தொலைவிலுள்ள ஒரு காலத்தில் தோன்றுவார் என்றே கருதியிருந்தேன். அல்லாஹ்வுக்கு நன்றி! இந்த மகிழ்ச்சியான நேரம் எனது வாழ்நாளிலேயே எனக்கு கிடைத்து விட்டது. கனவிலேயே எனக்கு ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்கள் தானே கலீஃபாவாக இருக்கின்றார்கள். மியான் சாஹிப் எவ்வாறு கலீஃபா ஆகிவிட்டார்? என்று நான் எண்ணுகின்றேன். அப்போது முதல் கலீஃபா அவர்கள் மிகவும் முதியவராக இருக்கப் போவதில்லை. ஏனென்றால், இறைவனுக்குப் பிரியமானவர்கள் மிகவும் பலவீனமடைந்து தளர்வடைந்து போகின்ற நிலையிலுள்ள முதிய வயதை அடைவதில்லை என்று கனவிலேயே எனக்குப் புரிந்தது.

சிலர் வாக்களிக்கப்பட்ட அந்த நபர் யார்? என்று கேள்வி எழுப்புகின்றனர். இவர்களுக்கு அந்தக் காலத்திலேயே இறைவன் அந்த நபர் யார் என்பதைப் பற்றி தெரிவித்து விட்டான்.

1906 ஆம் ஆண்டு பைஅத் செய்த **ஹஸ்ரத் கைர் தீன் சாஹிப்** அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருமுறை நான் கனவில் பார்த்தேன். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது வலது கை 11 கரம் நீளமானதாக ஆகிவிட்டது. கரம் என்பது கிராமங்களில் நிலத்தை அளப்பதற்காக பயன்படும் ஒரு அளவீடு ஆகும். ஒரு கரம் 5½ அடி. அதாவது 55 அடி நீளமாக விட்டது. இதில் இறைவன் அவர்களுக்கு அசாதாரணமான ஆற்றல்களை வழங்குவான் என்று கூறப்பட்டுள்ளது. அவற்றை யாரும் எதிர்த்து நிற்க முடியாது. இதே நிலையில் அவர்களது அருளுக்குரிய முகம் மேற்குத் திசையை நோக்கி இருப்பதை நான் பார்த்தேன். அவர்கள் ஒரு சிறிய சுவற்றின் மீது அமர்ந்திருக்கின்றார்கள். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அப்போது நான் ஹுஸூர்! நீங்கள் ஏன் அழுகின்றீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் மக்கள் என்னை வணக்கத்திற்குரியவனாக ஆக்கிவிடக் கூடாது என்பதற்காகவே அழுகின்றேன் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் கைருத்தீன் சாஹிப் அவர்களே அறிவிக்கின்றார்கள்:**

சில நாட்களுக்கு முன் ஒரு கனவு பார்த்தேன். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா) அவர்கள் மக்களுக்கு கடிதங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவை விண்ணில் உயர்வான இடத்தைப் பெற்றிருந்த அந்த மனிதர்களுக்குரிய கடிதங்களாக இருந்தன. அவர்களது தகுதிக்கு ஏற்ப ஒவ்வொருவருக்கும் அவர்கள் கடிதத்தைக் கொடுத்தார்கள். அப்போது நான் ஹுஸூர் அவர்களிடம் எனக்கு வானத்தில் ஏதாவது இடம் இருக்கிறதா? என்று கேட்க எண்ணினேன். ஹுஸூர் எனக்கும் வானத்தில் இடம் இருக்கின்றதா? என்று நான் கேட்டேன். அதற்கு ஆம்! உங்களுக்கும் வானத்தில் இடம் இருக்கின்றது என்று கூறினார்கள். இந்த விசயங்களிலிருந்தும் எவை இந்த எளியவனுக்கு தென்பட்டதோ அல்லது தென்பட்டுக் கொண்டிருக்கிறதோ அவை எல்லாம் நுபுவ்வத்தின் ஒளியின் கதிர்களால்தான் தெரிகிறது என்பது புரிந்தது.

**1891 ஆம் ஆண்டு பைஅத் செய்த ஜம்முவைச் சார்ந்த ஹஸ்ரத் கலீஃபா நூருத்தீன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனக்கு 1931 ஆம் ஆண்டு கஷ்ஃப் காட்சியை நான் கண்டு கொண்டிருக்கும் நிலையில் அதில் எனக்கு ஒரு ஆண் குழந்தை காட்டப்பட்டது. அந்த குழந்தையுடன் எல்லாருமே அன்பு செலுத்திக் கொண்டிருந்தனர். நானும் அக்குழந்தையை மடியில் அமர்த்திக் கொண்டவாறு அன்பு காட்டினேன். அது சிறு குழந்தையாக இருந்தும் கூட மக்கள் இவருக்கு 43 வயதாகின்றது என்று கூறுகின்றனர். அப்போது எனது உள்ளத்தில் கஷ்ஃபில் காட்டப்பட்ட குழந்தை ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹான மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்கள் ஆவார்கள் என்று போடப்பட்டது. 1931 ஆம் ஆண்டில் அவர்களது வயது 43 ஆக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஒரு முன்னறிவிப்பு அவர்களது கவிதையில் இடம்பெற்றிருந்தது.

அதாவது, உனது மகன் ஒருவர் ஒரு நாள் எனது நேசத்திற்குரியவராக ஆகி விடுவார் என்பதே அந்தக் கவிதையாகும். அதில் அலிஃப் யே காஃப் (ஏக்) என்ற சொல்லில் 1931 சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அப்ஜது

கணக்குப்படி அலிஃப் யே காஃப் என்ற சொல்லின் எண்ணிக்கை 31 ஆகும். அலிஃப், யே, காஃப் ஆகிய எழுத்துக்களின் எண்ணிக்கை அப்ஜது கணக்குப்படி 31 ஆகும். ஆன்மீக முன்னேற்றத்தில் நிறைவடைவது என்பது கூட 40 வயதிலிருந்துதான் ஆரம்பமாகிறது. எனவே தான் இந்தக் கஷ்ஃபில் குழந்தைக்கு 43 வயது என்று காட்டப்பட்டது.

**1902 ஆம் ஆண்டு பைஅத் செய்த ஜமாலுத்தீன் சாஹிப் அவர்களது மகன் ரஹம்தீன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

இரண்டாவது கிலாஃபத்தின் காலக்கட்டத்தில் கனவில் நான் பார்த்தேன். மவ்லவி முஹம்மதலி சாஹிப் எம்.ஏ. நாற்காலியில் அமர்ந்துள்ளார்கள். மியான் சாஹிப் அதாவது இரண்டாவது கலீஃபா அவர்கள் அருகில் நிற்கின்றார்கள். நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மவ்லவி முஹம்மதலி சாஹிப் அவர்களின் முகமும் உடலும் சிறிதாக ஆக ஆரம்பித்தது. பிறகு குழந்தையின் உடலைப் போன்று அவர்களது உடல் முற்றிலும் சிறியதாகி விட்டது. மியான் சாஹிபின் உடல் வளர்ந்து வளர்ந்து மிகவும் உயரமாக ஆகிவிட்டது. அவர்களது சராசரி உயரத்தை விட அது மிகவும் உயரமாக இருந்தது. திகில்மிக்க கம்பீரமான தோற்றத்தையுடையதாக அது இருந்தது. நான் மிகவும் வியப்படைந்தேன். விடிந்ததும் காலைப் பொழுதில் எனது உள்ளத்திலிருந்த எல்லா சந்தேகங்களும் அகன்றன. நான் அவர்களிடம் பைஅத் செய்தேன். முதலில் இவர்களது உள்ளத்தில் சில சந்தேகங்கள் இருந்தன. வல்ஹம்துலில்லாஹி அலா தாலிக்.

**பிறகு அமீர் முஹம்மது கான் சாஹிப் அவர்களது அறிவிப்பில் கூறுகின்றார்கள்:**

எந்த நாட்களில் கிலாஃபத்திற்கு முன் ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஹஜ் செய்வதற்காக சென்றார்களோ அந்த நாட்களில் நான் கனவில் முஸ்லிம்கள் காஃபிர்களால் சூழப்பட்டிருப்பதைக் கண்டேன். தப்பித்துச் செல்ல எந்தவொரு வழியும் இல்லாமல் இருந்த போது நம்மில் ஒரு நபர் வானத்தின் பக்கம் பறந்து சென்றார். அவர் வானத்திலிருந்து வலுவான பலமிக்க ஒரு படைப்பினத்தை தன்னுடன் அழைத்து வந்தார். அது வந்ததுமே காஃபிர்களை விரட்டி அடித்தது. நான் இந்தக் கனவை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு அன்னார் மக்கா மற்றும் மதீனாவிற்கு பயணம் சென்றிருக்கும் தருணத்தில் எழுதி அனுப்பினேன். மேலும் ஹுஸூர் அவர்களது இந்தப் பயணம் இறைவனின் திருப்தி மற்றும் அவனது நெருக்கத்தை பெறுவதற்கான ஒரு வழியாக அமையட்டும் என்று எழுதினேன். கனவில் நான் ஒருவரை வானத்தில் பறப்பதாகக் கண்டதன் பொருள் அவர்களது ஹஜ் பயணமாகும். வலுவான பலமிக்க ஒரு படைப்பினம் இறங்குதல் என்பதன் பொருள் அவர்களது துஆவின் மூலமாக மலக்குகள் இறங்குவதாகும். அதுவே காஃபிர்களை அழித்து அவர்களை ஒன்றுமற்றவர்களாக ஆக்கி விடும். ஹுஸூர் அவர்கள ஹஜ் செய்து விட்டு திரும்பி வந்த சமயத்தில் மஸ்ஜுது நூரில் வைத்து சொற்பொழிவாற்றியவாறு எனது இந்த கடிதத்தைப் பற்றியும் குறிப்பிட்டுக் கூறினார்கள் என்று நான் எண்ணுகின்றேன்.

**பிறகு அமீர் கான் சாஹிப் அவர்களே கூறுகின்றார்கள்:**

1913 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் தேதி அன்று இசா தொழுகையின் போது நான் அல்லாஹ்வே! நீ எனக்கு ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்), ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் ஏனைய பெரியார்களை கனவில் சந்திப்பதற்குரிய பாக்கியத்தை வழங்குவாயாக! என்று துஆ செய்தேன். பிறகு நான் உறங்கி விட்டேன். அப்போது நான் என்ன பார்த்தேனென்றால் ஒரு மைதானத்தில் பல மார்க்கப் பெரியார்கள் ஒன்றுசேர்ந்துள்ளனர். எல்லாரும் துஆவில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் எனக்கும் முன்னால் மல்லிகைப் பூ இருக்கின்றது. அதன் நறுமணத்தை நாங்கள் நுகர்ந்து கொண்டிருந்தோம். அப்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் என்னிடம் பூக்களை நுகர்கின்றபோது அவற்றை மூக்கில் வைக்கக் கூடாது. மூக்கிலிருந்தும் சற்று தொலைவில் அவற்றை வைக்க வேண்டும். அதன் மூலம் பூக்களின் நறுமணமும் தூயதாக இருக்கும் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப் அவர்களே கூறுகின்றார்கள்:**

1913 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஓரிரவில் கண்ட கனவில் ஹஸ்ரத் மியான் சாஹிபுடன் சேர்ந்து எத்தகைய வீடுகளின் காட்சியை நான் கண்டேன் என்றால் அவற்றின் கீழ் கடல்நீர் புகுந்திருந்தது. அவர்கள் அதைப் பற்றி தெரியாத நிலையில் அழிவின் அருகில் சென்று விட்டார்கள். இதன் விளக்கம் கிலாஃபத்தை மறுத்தவர்களின் மறுப்பு மூலம் நிறைவேறியது.

பிறகு கூறுகின்றார்கள்: 1930 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடு இரவில் நான் கனவில் ஒரு ஏணிப்படிகளில் ஏறிச் செல்வதைப் பார்த்தேன். எனக்குப் பின்னால் ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் சாஹிபா அவர்களும் ஏறிக் கொண்டிருந்தார்கள். நான் அவர்களைப் பார்த்ததும் அவர்கள் மீது வைத்திருந்த மரியாதை நிமித்தம் அஞ்சினேன். அப்போது உம்முல் மூஃமினீன் சாஹிபா அவர்கள் மிகுந்த பரிவுடன் அஞ்ச வேண்டாம். நீங்களும் எங்களது குழந்தை தான் என்று கூறினார்கள். பிறகு நான் ஒரு ஏணிப்படியில் ஏறிச் சென்று இன்னொரு வீட்டிற்குள் சென்று விட்டேன். அந்த வீடும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வீடாகும். என்ன பார்த்தேனென்றால் எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது குடும்பத்தில் வேலை கிடைத்தது. ஆனால் எனக்கு கிடைத்த சம்பளமோ சப் இன்ஸ்பெக்டராக நான் இருந்த போது கிடைத்த சம்பளத்தை விட மிகவும் குறைவானதாக இருந்தது. ஆலோசனை செய்த பிறகு நான் அந்த வேலையை ஏற்றுக் கொண்டேன். அப்போது ஒரு நபர் என்னிடம் நீங்கள் ஏற்கனவே செய்த வேலையை ஏன் விட்டு விட்டீர்கள்? என்று கேட்கின்றார். அதற்கு நான் இந்த நபர் என்னை ஏமாற்றினார் என்று கூறினேன். பிறகு இன்னொரு நபர் அல்லது அதே நபர் என்னிடம் காலதாமதமாக ஏன் வந்தீர்கள்? என்று கேட்கின்றார். அதற்கு நான் வந்திருந்த இந்த விருந்தாளிகள் நோயுற்றிருந்தார்கள். அவர்களை நலம் விசாரித்ததன் விளைவாக காலதாமதமாகி விட்டது என்று கூறினேன். இதைக் கேட்ட உம்முல் மூஃமினீன் சாஹிபா அவர்கள் நலம் விசாரிப்பதனால் காலதாமதம் ஏற்படத்தான் செய்யும் என்று கூறினார்கள். இதற்குப் பிறகு நான் என்ன பார்த்தேன் என்றால் சில மனிதர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது வீட்டில் புகுந்துள்ளார்கள். அங்கு அவர்கள் தீங்கு விளைவிக்க விரும்பினர். எனது கைகளில் வாள் இருந்தது. நான் வாள் மூலமாக எல்லாரையும் விரட்டி விட்டேன். நான் திரும்பி வந்த போது இன்னொரு நபர் மீண்டும் ஒரு வாளை எடுத்துக் கொண்டு உள்ளே புகுந்து செல்வதைக் கண்டேன். நான் எனது வாள் மூலமாக அவரது வாளை வீழ்த்தினேன். அவர் தோல்வி அடைந்தார். இந்தத் தருணத்தில் சிலர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சூழ்ந்தவாறு செல்கின்றனர். அப்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் குரல் கொடுத்து என்னை அழைத்தார்கள். நான் இந்தக் கூட்டத்தையும் சிதறுண்டு போகும்படி செய்தேன். இந்தக் குழப்பத்தின் தலைவராக இருந்த இன்னொரு நபர் என்னை வாள் மூலமாக கொலை செய்ய விரும்பினார். அவர் என் பக்கம் முகம் திருப்பியவாறு பின்னால் தள்ளிப் போய்க் கொண்டிருந்தார். நானும் அவரை எனக்கு முன்னால் வைத்தவாறு அவர் பக்கம் முன்னேறிச் சென்று கொண்டிருந்தேன். எதுவரையென்றால் அவரை எனது பிடியில் கொண்டு வந்து கொலை செய்து விட்டேன். பிறகு நான் உள்ளே திரும்பி வந்த போது ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் சாஹிபா அவர்களும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் எனக்கு குடிக்கப் பால் தந்தார்கள். ஒரு நபர் நான் பால் அருந்துவதைப் பார்த்து நீங்கள் ஏன் பால் குடிக்கின்றீர்கள்? என்று கேட்கின்றனர். அதற்கு நான் பால் தீயதா? பால் குடிப்பது மிகவும் நல்லது என்று கூறினேன். பிறகு எனது கண்கள் திறந்தன. நான் இந்தக் கனவை எழுதி கடிதம் மூலமாக அதனை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் அருளுக்குரிய சமூகத்திற்கு அனுப்பி வைத்தேன். ஹுஸூர் அவர்கள் 5.3.1930 அன்று தனிச்செயலர் அவர்கள் மூலமாக இது நல்ல கனவாகும். அல்லாஹ் உங்களை ஏதாவது மார்க்கத் தொண்டாற்றும்படி செய்வான் என்று பதில் எழுதினார்கள். இதற்குப் பிறகு ஏப்ரல் 30ம் தேதி மீண்டும் நான் ஹுஸூர் அவர்களுக்கு கடிதம் எழுதினேன். அதில் ஸெய்யதுனா வ இமாமனா அமீருல் மூஃமினீன் அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் என்று எழுதி விட்டு இந்தக் கவிதையை எழுதினேன்.

உண்மையின் வழியில் ஒவ்வொரு சோதனையையும் சந்திக்க வேண்டியதுள்ளது. அதற்குப் பின்னால் இறைவனின் கருணை மறைந்து நிற்கின்றது.

மிஸ்தரிகள் குழப்பத்தை ஏற்படுத்தியது மற்றும் போலீஸின் தகாத நடவடிக்கை ஆகியவற்றைப் பற்றி கேள்விப்பட்டு எனது உள்ளம் எனது கட்டுப்பாட்டிலிருந்தும் வெளியேறி விட்டது. சில நாட்கள் முன்புதான் கனவில் ஹுஸுர் அவர்களை தீங்கு விளைவிக்கக்கூடிய ஒரு பிரிவினர் சூழ்ந்து நிற்பதைப் பார்த்தேன். அவர்களை நான் வாள் மூலமாக சிதறுண்டு போகும்படி செய்தேன். இந்தக் கனவை நான் ஹுஸுர் அவர்களுக்கு எழுதியிருந்தேன். இதற்கு ஹுஸுர் அவர்கள் இறைவன் உங்களை ஏதாவது மார்க்கத் தொண்டு புரிய வைப்பான் என்று பதில் எழுதியிருந்தார்கள். எனவே, நான் இந்தத் தொண்டை செய்வதற்காக மிகுதியான ஆவலுடன் வழிமேல் விழி வைத்து காத்திருக்கின்றேன். ஆனால் இதை நான் எப்படி நிறைவேற்றப் போகின்றேன் என்பது எனக்குத் தெரியாது. துஆ மற்றும் இறை உதவியைக் கேட்டுப் பெறுவதைத் தவிர வேறு எந்த வழியும் எனக்குத் தெரியவில்லை. எனவே எனது வேண்டுதல் என்னவென்றால் எனக்காக துஆ செய்யுங்கள். இறைவன் எனது பலவீனங்களைக் கண்டும் காணாமல் விட்டு விட வேண்டும். எனது துஆக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். எனக்கு மார்க்கத் தொண்டாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

வஸ்ஸலாம்.

அமீர் முஹம்மது கான்
சப் இன்ஸ்பெக்டர், ஜலந்தர் மாவட்டம்

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்ஹம்துலில்லாஹ் ஸும்ம அல்ஹம்துலில்லாஹ். ஏழு வருடங்களுக்குப் பிறகு எனது இந்தக் கனவு சொல்லுக்கு சொல் நிறைவேறியது. 1924 ஆம் ஆண்டு நான் எனது உயர் அதிகாரியின் வழிகாட்டலுக்கேற்ப எனது வேலையை ராஜினாமா செய்தேன். பிறகு அவரது ஏமாற்று வேலை நிரூபணமாகியது. ஏனென்றால் அவர் சில காரணங்களின் விளைவாக என்னிடம் நானும் வேலையை விடுகின்றேன். நீயும் வேலையை விட்டுவிடு என்று கூறினார். ஆனால் அவர் இதுவரை தனது வேலையை விடவில்லை என்பது தெரிந்தது. இதற்கு முன்பு நான் செய்து வந்த வேலைக்கு எனக்கு மாதம் 90 ரூபாய் சம்பளம் கிடைத்து வந்தது. இப்போது காதியானில் 20 ரூபாய் மட்டுமே பெறுகின்றேன். கனவில் காட்டப்பட்டது போன்றே நிகழ்ந்தது. அஞ்சுமனில் வேலை கிடைக்கவில்லை. மாறாக தஹ்ரீகே ஜதீதில் வேலை செய்து வருகின்றேன். இது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சிறப்பான ஒரு திட்டமாகும். 1934 ஆம் ஆண்டு வேலையை விட்ட பிறகு 1936 ஆம் ஆண்டு வரை வீட்டு வேலையின் காரணமாக வீட்டிலே இருந்தேன். பிறகு இங்கு வந்து ஜமாஅத்தை விட்டு விலகிச் சென்றவர்கள் ஏற்படுத்திய குழப்பத்தை எனது கண்களால் கண்டேன். துஆவிற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இந்தக் குழப்பத்தின் தோற்றுனராக இருந்த ஃபஹ்ருத்தீன் சாஹிப் அவர்கள் கொலை செய்யப்பட்ட காட்சியையும் எனது கண்களால் கண்டேன். எனது எல்லா எண்ணங்களையும் நீ நிறைவேற்றி வைத்தாய். உனது கருணையால் உனது எதிரிகள் மரணமடைந்து விட்டனர்.

அதா முஹம்மது சாஹிப் அவர்கள் 1901 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் பைஅத் செய்து ஏறக்குறைய ஓராண்டு கழிந்த பிறகு சாகரவிலிருந்து அஹ்மது தீன் சாஹிப் அவர்கள் லாஹூரிலிருந்த எனது வீட்டிற்கு வந்தார்கள். பிறகு வாருங்கள்! இன்று முஹம்மதலி சாஹிப் அவர்களிடம் நபித்துவம் தொடர்பாக பேசுவோம் என்றார்கள். நானும் அவர்களுடன் சென்று விட்டேன். அங்கு பள்ளிவாசலில் நட்பின் சூழலில் ஹகீம் அஹ்மது தீன் சாஹிப் அவர்களும் மவ்லவி முஹம்மதலி சாஹிப் அவர்களும் பேச ஆரம்பித்தார்கள். இந்த உரையாடல் 15 அல்லது 20 நிமிடங்கள் வரை நீடித்தது. அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நபியா? இல்லையா? என்ற விசயம் தொடர்பாக பேசிக் கொண்டிருந்தனர்.

கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு நாங்கள் எல்லாரும் தத்தமது வீட்டிற்கு வந்து விட்டோம். இரவில் நான் இவ்வாறு துஆ செய்தேன். இறைவா! மவ்லவி முஹம்மதலி அவர்கள் கூறியது உண்மை போல் தோன்றுகிறது. அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நபித்துவம் தொடர்பாக இவரை சந்தேகத்தில் ஆழ்த்தி விட்டார். எனது உள்ளத்தை நீயே பாதுகாப்பாயாக! என்று துஆ செய்தேன். பிறகு இரவில் கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பதற்றத்துடன் விரைவாக வருவதைப் பார்த்தேன். பிறகு அவர்கள் அங்கே

பாருங்கள் என்றார்கள். நான் பார்த்த போது புறாக்களை வளர்க்கின்ற ஒருவர் மிகுந்த கோபத்துடன் இன்னொரு புறா வளர்க்கின்ற ஒருவரின் குடையில் அமர்ந்திருக்கின்ற ஒரு புறாவைப் பார்க்கின்றார். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றவர்களது குடையில் சென்று அமர்கின்ற புறாவை புறா வளர்ப்பவர்கள் மிகவும் அற்பமான பார்வையுடன் பார்க்கின்றனர். எனவே நீங்களும் ஒருபோதும் பயகாம் கட்டடத்திற்கு செல்ல வேண்டாம் என்று கூறினார்கள். அதற்கு நான் ஹஸ்ரத்! நான் ஒருபோதும் செல்ல மாட்டேன் என்று கூறினேன். பிறகு எனது தூக்கம் கலைந்தது. அல்லாஹ்வின் அருளுக்கு நான் நன்றி கூறினேன்.

**1907 ஆம் ஆண்டு பைஅத் செய்த டாக்டர் அப்துல் கனி சாஹிப் கடக் அவர்கள் கூறுகின்றார்கள்:**

காலம் கடந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்களது வஃபாத் நிகழ்ந்தது. நைரோபியிலிருந்த எல்லா அஹ்மதிகளும் இரண்டாவது கலீஃபா அவர்களிடம் பைஅத் செய்தார்கள். நானும் மர்ஹூம் முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட் மற்றும் மர்ஹூம் காஜா கமருத்தீன் சாஹிப் ஆகியோர் விலகி இருந்தோம். நாங்கள் பைஅத் செய்யாமல் இருந்தோம். அதற்குப் பிறகு எனக்கு இந்தியா செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. நான் வேலையை விட்டு விட்டேன். போர் தொடங்கி விட்டது. பிறகு நான் இந்தியாவிலேயே இருந்தேன். பிறகு இந்தியாவிலேயே லாஹூரிலுள்ள மருத்துவக் கல்லூரியில் Head Laboratory Assistant ஆக பணிபுரியும் வேலை கிடைத்தது. அந்த நாட்களில் நான் அதிகமாக பயகாம் கட்டடத்திற்குப் போய்க் கொண்டிருந்தேன். எனது இயல்பும் எண்ணங்களும் லாஹூரிகளுடன் ஒத்திருந்தது. அங்கேயே தொழுது வந்தேன். தர்ஸும் கேட்டு வந்தேன். அவ்வப்போது கருத்து வேறுபாடுள்ள விசயங்கள் தொடர்பாக கருத்துப் பரிமாற்றமும் நடைபெற்று வந்தது. ஜனாப் மர்ஹூம் டாக்டர் மிர்ஸா யாகூப் பேக் சாஹிப் அவர்களிடம் ஒருமுறை நான் இந்தக் கருத்து வேறுபாடுள்ள விசயத்தில் யார் உண்மையின் பக்கம் இருக்கின்றார்கள்? என்று கேட்டேன். அதற்கு பதில் கூறிய டாக்டர் சாஹிப் அவர்கள் புரியும் திறன் கொண்ட அனைவரும் எங்களுடன் இருக்கின்றார்கள் என்றார்கள். பெரும் பெரும் புரியும் திறன் கொண்டவர்கள் எங்களுடன் வந்து விட்டனர் என்றார்கள். அந்த நாட்களில் நான் ஹாஜி முஹம்மது மூஸா அவர்களது கடைக்கும் சென்று வந்து கொண்டிருந்தேன். அங்கு இன்றைய நாட்களில் Rajput Cycct Work ன் Propreitor ஆக இருக்கும் முன்ஸி மஹ்பூப் ஆலம் சாஹிப் அவர்களையும் நான் சந்தித்து வந்தேன். கருத்து வேறுபாடுள்ள விசயங்கள் தொடர்பாக மிகவும் சூடான விவாதம் இருந்து வந்தது. முன்ஸி சாஹிப் கொஞ்சம் கடினமான சொற்களையும் பயன்படுத்தி வந்தார்கள். நான் முன்ஷி சாஹிப் கடுஞ்சொற்களைப் பயன்படுத்திப் பேசுகின்றார் என்று கருதினேன். இவ்வாறு பேசுவது அவர்களது பழக்கமாகும். ஒருமுறை முன்ஸி சாஹிப் அவர்கள் என்னிடம் நீங்கள் பயகாம் கட்டடத்தில் என்ன செய்யப் போகின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான் திருக்குர்ஆன் தர்ஸ் கேட்பதற்காக செல்கின்றேன் என்று கூறினேன். முன்ஸி சாஹிப் அவர்கள் தினமும் நீங்கள் அங்கு திருக்குர்ஆன் தர்ஸ் கேட்பதற்காக செல்கிறீர்கள். இன்று அதைக் கேட்பதற்கு எங்களுடன் வாருங்கள் என்று கூறினார்கள். அந்த நாட்களில் தொழுகை மர்ஹூம் மியான் சிராகுத்தீன் சாஹிப் அவர்களது வீட்டில் வைத்து நடந்தது. தர்ஸும் அங்குதான் கொடுக்கப்பட்டு வந்தது. மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் ராஜிகி அவர்கள் தர்ஸ் கொடுத்து வந்தார்கள். முதன் முறையாக நான் சென்ற போது இரண்டாவது பாகமான சயகூலுவின் முதல் ருகூவிற்கான தர்ஸ் கொடுக்கப்பட்டது. மவ்லவி குலாம் ரஸூல் ராஜிகி சாஹிப் அவர்கள் உறுதியாகவும் ஆதாரங்களின் அடிப்படையிலும் தொடர்ச்சியாக பேசுவதைப் பார்த்தேன். அவர்கள் கொடுத்த தர்ஸ் போன்று இதற்கு முன்னர் நான் ஒருபோதும் கேட்டதில்லை. முதலில் அவர்களது தோற்றத்தைப் பார்த்ததும் இந்த நபர் ஒரு விவசாயி என்றே எனக்கு தோன்றியது. அவ்வாறுதான் நான் நினைத்தேன். இவர் என்ன தர்ஸ் கொடுக்கப் போகின்றார் என்று எண்ணினேன். மவ்லவி சாஹிப் அவர்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் இறைஞானத்தின் ஆறு ஓடிக்கொண்டிருப்பதை நான் பார்த்த போது அது வியப்பிற்கு எல்லை இல்லாமல் போய்விட்டது. பிறகு நான் முன்ஸி மஹ்பூப் ஆலம் சாஹிப் அவர்களிடம் மவ்லவி சாஹிப் அவர்களைப் பற்றி புகழ்ந்து கூறினேன். அதைக் கேட்ட அவர்கள் உங்களது மவ்லவி முஹம்மதலி சாஹிப் அவர்களும் இவர்களிடமிருந்துதான் திருக்குர்ஆனின் அறிவைப் பெற்றுக் கொண்டார்கள் என்று கூறினார்கள். அந்த நாட்களில் நான் சிறிது தடுமாற்றத்தின் நிலையில் இருந்தேன். அப்போது நான் ஒரு கனவு பார்த்தேன். பட்டாலாவிலுள்ள ஜாமிஆ பள்ளிவாசல் போன்று ஒரு பள்ளிவாசல் இருக்கின்றது. இந்த பள்ளிவாசலின்

நடுவில் அமர்ந்திருக்கும் நிலையில் எனக்கு எங்கிருந்தாவது தண்ணீரை வாங்கி உளூ செய்து தொழ வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகின்றது. இங்கும் அங்கும் பார்த்து விட்டு தண்ணீர் அங்கு இல்லை என்று நான் நினைத்தேன். பள்ளியில் அமர்ந்தவாறே அங்கு தண்ணீர் இல்லை என்று நினைக்கின்றேன்.

கூறுகின்றார்கள்: எனவே நான் தண்ணீரைத் தேடிச் சென்றேன். அப்போது பைகாம் கட்டடத்தின் பள்ளிவாசல் போன்று ஒரு பள்ளிவாசல் இருப்பது தெரிய வருகிறது. அங்கு தண்ணீர் பைப்புகள் இருந்தன. நான் அங்கு உளூ செய்வதற்காக பைப்பைத் திறந்தேன். அப்போது முதலில் தூய்மையான தண்ணீர் வந்தது. உடனடியாக அதற்குப் பிறகு அழுக்கு நிறைந்த தண்ணீர் வந்தது போன்று தெரிகிறது. பின்னர் அந்த தண்ணீரிலிருந்து பாசி வெளிப்பட்டது. அது எனது கைகளில் பட்டது. அது மிகவும் அழுக்கான தண்ணீராக இருக்கின்றதே என்று நான் கூறுகின்றேன். அந்தத் தண்ணீரும் கூட நின்று விட்டது. அதற்குப் பிறகு நான் ஏற்கனவே அமர்ந்திருந்த பள்ளிவாசலுக்கே திரும்பிச் செல்ல எண்ணினேன். உயர்வாக இருப்பதாக எனக்கு தோன்றிய அந்த சுவரின் மீது நான் ஏறுகின்றேன். டாக்டர் செய்யது முஹம்மது ஹுஸைன் சா சாஹிப் பின்னால் இருந்து வந்து எனது கால்களைப் பற்றியவாறு நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? மீண்டும் இங்கு வராதீர்கள் என்று கூறினார்கள். அவர் உளூ செய்த அந்த பள்ளிவாசலைப் பற்றிதான் கூறுகின்றார் என்று நினைக்கின்றேன்.

இங்கு ஏன் நீங்கள் வந்தீர்கள்? மீண்டும் இங்கு வரக்கூடாது என்று கூறினார். அதற்கு நான் இங்கு வர வேண்டிய அவசியம் எனக்கில்லை என்று கூறுகின்றேன். அதற்குப் பிறகு நான் அதே பள்ளிவாசலுக்குத் திரும்பிச் சென்று விடுகின்றேன். அதாவது எங்கு முதலில் அமர்ந்திருந்தார்களோ அந்தப் பள்ளிவாசலுக்குச் சென்று விட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: தூய்மையான தண்ணீர் நிரம்பியுள்ள தடாகம் ஒன்றை அங்கு பார்த்தேன். அங்கு குலாம் ரஸூல் சாஹிப் ராஜிகி ஒரு ஹதீஸ் நூலிலிருந்து தர்ஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அது கலர் பேப்பரில் அச்சிடப்பட்டிருந்தது. அடிக்குறிப்பும் அச்சிடப்பட்டிருந்தது. அப்போது நான் இங்கு தான் அதிகமாக தண்ணீர் இருக்கின்றதே! முதலில் நான் இதை மறந்து இருந்து விட்டேன் என்று கூறுகின்றேன்.

பிறகு நான் எப்போது உளூ செய்து விட்டு கைகளை எடுத்தேனோ அப்போது மிஸ்திரி முஹம்மது மூஸா சாஹிபின் மகனான முஹம்மது ஹுஸைன் வாளை எடுத்துக் கொண்டு எனது தலைக்கு மேல் நிற்பதைப் பார்த்தேன். அப்போது நான் இவருக்கு இரண்டாவது கலீஃபா அவர்களிடமிருந்து என்னைப் பற்றி இவர் முனாஃபிக் ஆவார். எனவே, இவர் கொலை செய்யப்பட வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று எண்ணுகின்றேன். நான் முஹம்மது ஹுஸைன் சாஹிபின் பக்கம் முகம் திருப்பிப் பார்த்து நான் அவரிடம் ஒரு மூஃமினைக் கொலை செய்வதற்காக நீங்கள் வாளெடுத்துள்ளீர்கள். நான் மூஃமின் என்று உங்களுக்குத் தெரியாதா? என்கின்றேன். இதற்குப் பிறகு காட்சி மாறி விட்டது. நான் கையில் வாளை எடுத்துக் கொண்டு நிற்பது போல் தெரிகிறது. சின்னஞ்சிறு சிறுவர்கள் சிவப்பு மற்றும் வெள்ளை நிற சீருடைகளை அணிந்தவாறு விதவையைப் போல் ஒப்பாரி வைத்து அழுகின்றனர். அது முஹர்ரமின் நாள் போன்று தெரிகிறது. நான் வாளை எடுத்துக் கொண்டு அந்த சிறுவர்களின் பக்கம் செல்கின்றேன். இங்கிருந்து சென்று விடுங்கள் என்று கூறுகின்றேன். அந்தச் சிறுவர்கள் ஓடி விடுகின்றனர். அதற்குப் பிறகு எனது மகன் அப்துல் கபூர் கான் அவர்களது வீட்டில் இருப்பது போல் தெரிகிறது. அந்த வீட்டிலுள்ள அறையில் நுழைவதற்காக நான் செல்லும் போது போலீஸின் சிப்பாய்கள் என்னைப் பரிசோதனை செய்ய வந்திருப்பது தெரிகிறது. என்னிடம் லைசன்ஸ் இல்லாத வாள் தான் இருக்கின்றது. எனவே அதை தேடத்தான் இவர்கள் வந்துள்ளார்கள் என்று நான் எண்ணுகின்றேன். ஆனால் அப்போது இந்த வாளை நான் ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு வந்துள்ளேன் என்று நான் எனது மனதில் நினைக்கின்றேன். இதற்குப் பிறகு எனது கண்கள் திறந்து விட்டன. இந்தக் கனவை எனது சில நண்பர்களிடமும் நான் கூறினேன். அப்போது மிஸ்திரி முஹம்மது மூஸா சாஹிப் அவர்கள் அந்தோ! நீங்கள் கனவிலேயே கொலை செய்யப்பட்டிருந்தால் அது மிகவும் நல்லதாக இருந்திருக்கும். நயவஞ்சகம் முற்றிலும் அழிக்கப்பட்டிரக்கும் என்று கூறினார்கள். இந்தக் கனவைப் பார்த்த பிறகும் இவர் பைஅத் செய்யாமல் இருந்தார்.

கூறுகின்றார்கள்: அதற்குப் பிறகு நான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் பைஅத் செய்தேன். பிறகு நான் இறைவனின் அருளால் ஜமாஅத் மீதுள்ள பற்றிலும் அன்பிலும் முன்னேறி இருந்தேன்.

**ஹஸ்ரத் கைருத்தீன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

அஹ்ராரிகளின் குழப்பம் மேலோங்கிய போது நான் கனவில் பார்த்தேன். ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் அவர்களது ஒரு பக்கத்தில் யூசுப் என்ற பெயருடைய ஒரு நபர் படுத்திருக்கின்றார். ஹுஸுர் அவர்களுக்கு அடுத்தப் பக்கத்தில் சேர் முஹம்மது என்பவர் படுத்திருக்கின்றார். அப்போது இறைவன் உண்மையிலேயே இவர் யூசுப்தான்; ஆனால் சில மக்கள் ஹுஸுர் அவர்களது முன்னேற்றத்தைக் கண்டு பொறாமையில் எரிகின்றார்கள். ஆனால் அவர்களுடன் வழக்கத்திற்கு மாற்றமான இறை சக்தி இருப்பதால் எரிகின்றவர்களால் எதுவும் செய்ய முடியாது. இந்த கனவு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்தக் கவிதைக்கு ஏற்பவே இருக்கின்றது.

யூசுபைப் பற்றி கேள்விப்பட்டுள்ளீர்கள். அவர் கிணற்றில் விழுந்து விட்டார். பிறகு கிணற்றிலிருந்து வெளியே வந்து விட்டார். அவரது குரல் இதுதான் என்பதே அந்தக் கவிதை வரிகள்.

**1896 ல் பைஅத் செய்த ஹஸ்ரத் டாக்டர் நிஃமத் கான் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

இரண்டாவது கிலாஃபத்தின் காலம் வந்த போது நான் பைஅத்திற்கான கடிதத்தை அமீருல் மூஃமினீன் அவர்களுக்கு எழுதினேன். அந்த நாளில் நான் விடுப்பு எடுத்துக் கொண்டு காங்க்டா மாவட்டத்திலுள்ள நாதூன் என்ற பிரதேசத்திலுள்ள எனது வீட்டில் இருந்தேன். மவ்லவி குலாம் ஹுஸைன் சாஹிப் பெசாவரி அவர்களது கடிதம் இவர்களுக்கு வந்தது என்று இவர்கள் கூறுகின்றார்கள். இவர்கள் சாஹிப் ஸாதா மிர்சா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மாமனார் ஆவார்கள். ஆனால் ஆரம்பத்தில் இவர்கள் பைஅத் செய்யவில்லை. லாஹுரிகளுள் சென்று விட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்களுக்கு வந்த அந்தக் கடிதத்தில் அவர்கள செய்த பைஅத்தை விட்டு விலகி அதை முறித்து விட வேண்டும் என எழுதப்பட்டிருந்தது. இரண்டாவது கலீஃபாவிடம் செய்த பைஅத்தை முறித்து விடும்படி எழுதப்பட்டிருந்தது. நான் இவர்களுடன் நீண்ட காலம் தொடர்பு கொண்டிருந்ததால் உண்மையான நிலையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதனால் நான் பைஅத்தை முறித்துக் கொண்டேன் என்ற அறிவிப்பை பயகாமே ஸுல்ஹ் என்ற பத்திரிகையில் எழுதியிருந்தேன். பிறகு லாஹுரிகளுடன் இணைந்திருந்தேன். ஆனால் இது அல்லாஹ்வின் அருளாகும். நபிமார்ளின் குடும்பம் தொடர்பாக எனக்கு முன்னர் இருந்து வந்த அவமரியாதையான சொற்கள் எனது நாவிலிருந்து வரவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சந்ததிகள், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் போன்றவர்கள் தொடர்பாக எவ்வித அவமரியாதையான சொற்கள் எனது நாவிலிருந்து வரவில்லை என்று இவர்கள் கூறுகின்றார்கள்.

கூறுகின்றார்கள்: இதே நிலை நீண்ட காலமாக இருந்து வந்தது. நான் ஏற்கனவே குறிப்பிட்ட மவ்லவி குலாம் ஹுஸைன் சாஹிப் அவர்கள் முதலில் பைஅத் செய்யவில்லை. 1940ம் ஆண்டில் தான் இவர் பைஅத் செய்தார். பைஅத் செய்தவர்களுடன் இணைந்து விட்டார். பிறகு காதியானிலேயே இருந்து விட்டார்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் லாஹுரிகளின் ஒன்றிரண்டு மாநாடுகளிலும் கலந்து கொண்டேன். 1930 ஆம் ஆண்டில் அல்லது அதற்கும் முன்னதாக நான் கனவில் பார்த்தேன். ஒரு பெரிய மாளிகை கடற்கரையில் இருக்கின்றது. கடல் அலைகள் மிகவும் வேகமாக அதன் மீது மோதுகின்றன. இதனால் பெரும் கூச்சல் நிலவுகிறது. இந்த மாளிகையிலிருந்து மவ்லவி முஹம்மதலி சாஹிப் அவர்கள் வெளியில் வந்த போது நான் அவர்களது முகத்தின் பாதிப் பகுதி வெண்மையாகவும் மீதமுள்ள பாதிப் பகுதி கருப்பாகவும் இருப்பதைப் பார்த்தேன். உடனடியாக எனக்கு இவர்களது வாழ்க்கையில் முதல் கட்டம் அதாவது அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் வாழ்ந்த அவர்களது வாழ்க்கை நன்றாக இருந்தது. அதற்குப் பிறகு அது கருப்பாக ஆகி விட்டது என்ற எண்ணம் வந்தது. இறைவன் தனது அடியாரை நேர்வழியின் பக்கம் கொண்டு வரும்போது அவருக்கு நேர்வழி கிடைப்பதற்கான காரணிகளையும் அவனே ஏற்படுத்துகின்றான்.

நான் 1932 ஆம் ஆண்டில் எனது வீட்டில் இருந்தேன். எனது குடும்பத்தினர் சர்கோதாவில் இருந்தனர். எனது உறவினரான அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் முஹம்மது யூசுப் சாஹிப் அவர்களது கடிதம் எனக்கு வந்தது. அதில் நீங்கள் மிகவும் விரைவாக காதியான் வந்து விடுங்கள். நான் அமெரிக்கா செல்ல இருக்கின்றேன். வீடு கட்டும் பணியை உங்களிடம் ஒப்படைக்கின்றேன். அதாவது காதியானில் வீடு கட்டுகின்ற பணியை நீங்கள் கண்காணிக்க வேண்டும் என்று எழுதியிருந்தார்கள். இதன் காரணமாக 1932 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நான் காதியான் வந்தேன். வீடு கட்டும் வேலை நடந்தது. எனது குடும்பத்தினர் இங்கு வந்து பார்த்த போது வியக்கத்தக்க நிலைமையை இங்கு கண்டார்கள். அவர்களுக்கு புதிய பூமியும் புதிய உலகமும் தென்பட்டது. தொழுகைகளில் கலந்து கொள்வது, ஹஸ்ரத் சாஹிபின் குத்பாக்களை கேட்பது, சொற்பொழிவுகளைக் கேட்பது போன்றவை எத்தகைய சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் எங்களுக்கு ஏற்பட்ட தவறான எண்ணங்கள் மெதுமெதுவாக அகல ஆரம்பித்தது. தற்செயலாக நான் காதியானிலிருந்து நாதூன் சென்றேன். முஹம்மது உமர் அவர்கள் தப்லீகிற்காக அங்கு வந்திருந்தார். பேசிக் கொண்டிருந்த சமயத்தில் அவர்கள் என்னிடம் பைஅத் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள் என்று கூறினார்கள். பைஅத் படிவத்தை நான் நிரப்பினேன். இறைவன் என்னை தனது அருளின் நிழலின் கீழ் என்னை எடுத்துக் கொண்டான். என்னைப் போன்ற ஒரு பாவிக்கு அவன் மீண்டும் வாழ்வை வழங்கினான். எனது நண்பர்கள் இதுவரை வழிகேட்டின் பிடியில் சிக்கியுள்ளனர். நாம் பெரும் தவறிழைத்திருக்கின்றோம் என்பதை அவர்களது உள்ளம் உணர்ந்திருக்கின்றது. வெளிப்படையான முறையில் அவர்கள் செல்வந்தவர்களாக இருப்பது உண்மையை ஏற்றுக் கொள்வதில் அவர்களுக்கு தடையாக இருக்கின்றது. இதுவே அவர்களது நரகமாகும். அதில் வீழ்ந்து ஒவ்வொரு சமயமும் அவர்கள் எரிந்து கொண்டிருக்கின்றார்கள். உள்ளமோ ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றே விரும்புகிறது. ஆனால் மூக்கறுந்து போகும் நிலை ஏற்பட்டு விடுமே என்ற அச்சமே அவர்களுக்கு இருக்கின்றது. இறைவன் அவர்களுக்கு நேர்வழி காட்டுவானாக! எனது நிலைமையில் அல்லாஹ் குறிப்பாக அருள் செய்துள்ளான். இரண்டு வருடங்களுக்கு முன் ஒருநாள் இரவு நான் கனவில் பார்த்தேன். விண்ணிலிருந்து ஒரு ஒளிமயமான தங்க நிறத்தால் ஆன பிரகாசம் நிறைந்த ஒரு பெட்டி இறங்கியது. காற்றில் தொங்கியவாறு அது ஓரிடத்தில் வந்து நின்றது. வேலைப்பாடுகள் நிறைந்த தங்க நிறத்தால் ஆன ஒரு மணிமகுடம் இறங்கியது. அது நிற்பதற்காக இறங்கியதும் நான் பறந்து சென்று எனது இரு கைகளாலும் அதை தாங்கிப் பிடித்தேன். அதை நான் தாங்கிப் பிடித்ததுமே முழு உலகத்தின் எல்லைகளிலிருந்தும் ஒருமித்த குரலில் இஸ்லாத்தின் வெற்றி என்ற ஓசை கேட்டது. அதனால் எத்தகைய கூச்சல் ஏற்பட்டதென்றால் அதனால் எனது கண்கள் திறந்தன. அப்போது எனது உள்ளத்தில் இந்த மணிமகுடம் பிரிட்டன் உடையதாகும் என்பது போடப்பட்டது.

**ஹஸ்ரத் மியான் சோனேகான் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

1928 ஆம் ஆண்டு மே மாதத்தில் அஹ்ராரிகள் மிகவும் வலுவாக செயல்பட்டு வந்த சமயத்தில் நான் துஆ செய்ய ஆரம்பித்தேன். அதிகமாக தரூது ஓத ஆரம்பித்தேன். அஹ்ராரிகள் ஜமாஅத்திற்கு எதிராக மிகப்பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தனர். இறைவா! எனது தலைவரின் கண்ணியத்தை பாதுகாப்பாயாக! எதிரிகள் மிகவும் வலுவான நிலையில் உள்ளனர் என்று நான் துஆ செய்தேன். அப்போது எனக்கு ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைக் கனவில் சந்திக்க நேர்ந்தது. அப்போது நான் என்ன பார்த்தேன் என்றால் மூன்று ஒட்டகங்கள் இருந்தன. ஒவ்வொன்றிலும் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும் அமர்ந்திருந்தனர். மற்ற ஒட்டகங்களில் சஹாபாக்கள் அமர்ந்திருந்தனர். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சோனே கான் நீங்கள் வந்து விட்டீர்கள். செல்லுங்கள். மெது மெதுவாக பாதங்களை எடுத்து வைத்து நடந்து வாருங்கள். அதன் மூலம் எதிரிகள் மீது திகில் சூழ்ந்து கொள்ள வேண்டும். ஹுஸூர் அவர்களது இந்த அடிமை முன்னே சென்று கொண்டிருந்தேன். 10 அடிகள் எடுத்து வைத்ததும் ஹுஸூர் (ஸல்) அவர்கள் சோனே கான் நீங்கள் கொஞ்சம் பின்னால் செல்லுங்கள். உங்களது பாதங்கள் கூச்சலை ஏற்படுத்துகிறது என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒட்டகத்திலிருந்து இறங்கி நடந்து செல்ல ஆரம்பித்தார்கள். மஸ்ஜிது முபாரக்கை அடைந்ததும் காதியானிலுள்ள மஸ்ஜிது முபாரக்கை சென்றடைந்தவுடன் எல்லா சஹாபாக்களும்

ஒட்டகத்திலிருந்து இறங்கினார்கள். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மஸ்ஜிது முபாரக்கிற்குள் சென்றார்கள். சஹாபாக்களும் மஸ்ஜிது முபாரக்கிற்குள் வந்தார்கள். அவர்களை அங்கு விட்டு விட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் மஸ்ஜிது முபாரக்கில் இருந்த ஜன்னல் வழியாக இரண்டாவது கலீஃபா அவர்களது வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அத்துடன் இவர்களது கனவு முடிந்து விடுகிறது.

**ஹஸ்ரத் கைருத்தீன் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை கனவில் காபூலின் அமீர் அவர்கள் நான் எனது பைசாவை அனுப்பி விட்டேன். பின்னால் மிஸ்திரிகள் குழப்பத்தை ஏற்படுத்திய போது அவனது மிஸ்திரிகளின் குழப்பம் என்பது காதியானுக்கு உள்ளே நிலவிய குழப்பமாகும். இவர்கள் பெரும் கூச்சலை ஏற்படுத்தினார்கள். அப்போது நான் கனவில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா அவர்கள் வானத்தில் உலாவுவதைப் பார்த்தேன். இதன் மூலம் அவர்களது தகுதி மிகவும் உயர்வானது. அதை அடைவது மிகவும் கஷ்டமானதாகும் என்பது தெரிய வந்தது. அது முடியாத காரியம் என்பது தெரிய வந்தது. உலகிலுள்ள மக்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் இறைவனது அருளால் அவர்களால் இவர்களுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்திவிட முடியாது. ஏனென்றால் அவர்களது அருளுக்குரிய பாதங்கள் மிகவும் உயர்ந்த இடத்தில் இருக்கின்றது. இந்நிலையானது ஹுஸுர் (அலை) அவர்களது இந்த கவிதைக்கேற்ப இருக்கின்றது.

விண்ணில் தங்கியிருப்பவர்களுக்கு பூமியில் இருப்பவர்களுடன் என்ன தொடர்பு இருக்க முடியும்?

**ஹஸ்ரத் மியான் சோனே கான் சாஹிப் கூறுகின்றார்கள்:**

இப்போது நான் என் மீது வெளிப்படுத்தப்பட்ட இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் உண்மையை எடுத்துக் கூறுகின்றேன். எப்போது அஹ்ராரிகள் மிகவும் வலுவாக செயல்பட்டார்களோ மிஸ்திரிகளும் கூட ஹுஸுர் மீது மிகவும் அதிகமாக குற்றச்சாட்டுகளை சுமத்தியபோது நான் அல்லாஹ்வே! எனது தலைவரின் கண்ணியத்தை நிலைநாட்டுவாயாக! அவரோ எனது மஸீஹின் புதல்வராவார் என்று மிக அதிகமாக துஆ செய்தேன். மிகவும் அதிகமாக தரூதும் சூரா ஃபாத்திஹாவும் ஓதினேன். துஆ செய்து கொண்டே இருந்தேன். கனவில் நான் பார்த்த உலகில் ஒரு நபர் என்னிடம் வந்தார். அவர் கிழக்குப் பக்கம் புட்டான் காவோவில் மவ்லவிமார்கள் வந்துள்ளனர். அவர்கள் அஹ்மதிகளை வேரோடு அழித்து விட வேண்டும் என்றும் கூறுகின்றனர் என்று கூறினார். இந்த அடியான் பரக்கத் அலி அஹ்மதி மற்றும் ஃபதஹ் அலி அஹ்மதி ஆகியோரை என்னுடன் அழைத்துக் கொண்டு மவ்லவிகளிடம் செல்ல ஆரம்பித்தேன். கனவில் இவர்கள் அங்கு செல்கின்றனர். நாங்கள் தரிகட் என்ற கிராமத்தை அடைந்ததும் அஸர் தொழுகைக்கான நேரம் வந்தது. நான் இமாமாக நின்று இந்த இரண்டு அஹ்மதிகளுக்கும் தொழ வைக்க ஆரம்பித்தேன். இத்தருணத்தில் சிரத்கான் குலாம் கோஸ் அஹ்மதி அவர்களும் வந்தார்கள். நான் வானத்தின் பக்கம் பார்த்தேன். வானத்தில் இரண்டு சந்திரன்கள் இருந்தன. ஒரு சந்திரன் பிரகாசமாக இருந்தது. அந்த சந்திரனுடன் சதுர வடிவில் இருந்த மற்றொரு சந்திரன் ஒளியில்லாத நிலையில் இருந்தது. நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அதில் ஒளி வர ஆரம்பித்தது.

சுருக்கமாக கூறுவதென்றால் அந்த மற்ற சந்திரனும் அதனோடு இருந்த சந்திரனுக்கு சமமாக ஒளிமயமானதாக ஆகி விட்டது. நான் துஆ செய்தேன். இந்த இரண்டு நிலவும் ஒன்றுபோல் பிரகாசமாக ஒளிமயமானதாக இருந்தது. அந்த சமயத்தில் எனக்கு இந்தக் குரல் கேட்டது. முதலாவது சந்திரன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆவார்கள். இப்போது ஒளியால் பிரகாசத்தை அடைந்த சந்திரன் இரண்டாவது கலீஃபாவான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது ஆவார்கள் என்ற குரல் கேட்டது.

காதியானில் மிஸ்திரிகளும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள் என்று நான் கூறியிருந்தேன். அதில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மீது மிகவும் அசுத்தமான குற்றச்சாட்டுகளை இவர்கள் சுமத்தினர். அவர்கள் மீது வழக்கு தொடர்ந்தனர். அதுபற்றி கொஞ்சம் கூறி விடுகின்றேன். பெரும்பாலான மக்களுக்கு இதுபற்றி தெரிந்திருக்காது. சுருக்கமாக இது தொடர்பாக இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் சிலரை கொலை செய்ய ஆட்சேபனை நியமித்ததாக என் மீது குற்றச்சாட்டு கூறப்பட்டது. இந்த மக்கள் மெஷின் சாயன் என்ற கடையுடன் தொடர்புடையவர்கள் ஆவர். அவர்கள் தரப்பிலிருந்தே இந்த வழக்கு தொடரப்பட்டது. இரண்டாவது வழக்கு இனி எதிர்காலத்தில் என்னிடமிருந்து இதுபோன்ற சம்பவம் நடக்காது என்ற உத்திரவாதம் வாங்க வேண்டும் என்பதாகும்.

பிறகு தொடர்ந்து கூறுகின்றார்கள்: கொலை செய்வது பெரிய விசயம். ஆனால் நான் இவர்களுக்கு எதிராக துஆ கூட செய்ததில்லை. ஆனால் அவர்களாகவே யூகங்களைப் பின்பற்றிச் செயல்பட்டனர். கற்பனையாக இவர்கள் உருவாக்கிய காரணங்களால் நான் இவர்களுக்கு எதிரான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றேன் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. இந்த மக்கள் பத்திரிகைகளிலும் கூறப்பட்டிருந்த இப்படிப்பட்ட சில காரணங்களை முன்வைத்து பல்வேறு விதமான தகாத செயல்களில் ஈடுபட்டனர்.

கூறுகின்றார்கள்: எவர்கள் ஒழுக்க நிலையிலிருந்தும் விலகி விடுகின்றார்களோ அவர்கள் தங்களது காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தும் போது பழிவாங்குவதற்காக ஒழுக்கமற்ற நிலையை மேற்கொண்டு நடக்க துணிந்து விடுகின்றனர். இதன் காரணமாகவே இவர்கள் இப்படிப்பட்ட விசயங்களைப் பேச ஆரம்பித்தார்கள். அவை குற்றச்சாட்டுகள் மற்றும் பழித்துரைகளுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன.

இவர்கள் மிகவும் அசிங்கமான குற்றச்சாட்டுகளை அவர்கள் மீது சுமத்தினார்கள். ஆனால் அவர்கள் அதற்கு எந்தப் பதிலும் கூறவில்லை.

**அஹ்மதிய்ய வரலாற்றில் எழுதப்பட்டிருப்பதை சுருக்கமாகக் கூறுகின்றேன்:**

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வெற்றியையும் ஒவ்வொரு பகுதியிலும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹிற்கு கிடைத்த வரவேற்பையும் புகழையும் பார்த்து ஜமாஅத்தின் மகிமையையும் அவர்களது புகழையும் பார்க்க முடியாத சிலர் அவர்களை வலுவாக எதிர்க்க ஆரம்பித்தனர். இந்த நோக்கத்திற்கான மெஷின் சாயன் கடையை நடத்தி வந்த காதியானிலுள்ள சில மிஸ்திரிகள் இதற்கு கருவியாக மாறினர். இவர்கள் இரண்டாவது கலீஃபா அவர்கள் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மீது அவர்கள் பிறரை கொலை செய்ய முயற்சி செய்ததாக வழக்கு தொடரப்பட்டது. அதை தவிர முபாஹிலா என்ற பெயரில் ஒரு பத்திரிகையும் அவர்கள் காதியானிலிருந்து வெளியிட்டார்கள். அதில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மீது மிகவும் தாக்குதல்களை தொடுத்தவாறு வெட்கங்கெட்ட மோசமான குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது சுமத்தினர். தங்களது பழித்துரைகள், பிறரை தூண்டும் விசயங்களைக் கூறுவது ஆகியவற்றால் ஜமாஅத்திற்கு எதிராக இழிவான தாக்குதல்களின் புயலை வீசச் செய்தார்கள். இந்தக் குழப்பம் ஒரு ஆழமான சதித்திட்டத்தின் விளைவேயாகும். இதற்குப் பின்னால் அஹ்மதிய்யா ஜமாஅத்தை எதிர்க்கும் சக்திகள் ஒன்றிணைந்து செயல்பட்டன. அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தவும் அதனை அழிப்பதற்கும் எல்லா விதமான முயற்சிகளும் செய்யப்பட்டன. இந்த குழப்பம் அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் அசுத்தமான எண்ணங்களை வெளிப்படுத்தி அவர்களின் திரையை அகற்றிக் காட்டியதுடன் அதன் மூலம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் உயர்வான மகிமையையும் அது வெளிப்படுத்திக் காட்டியது. பொறுமை, சகிப்புத்தன்மை ஆகியவற்றிற்கான எத்தகு மகத்தான நறுமணத்தை அவர்கள் நிலைநாட்டியிருந்தார்கள் என்றால் நாட்டிலுள்ள நல்லியல்புள்ள சிந்திக்கும் திறன் கொண்ட மக்களை அது வியப்பில் ஆழ்த்தியது. இவ்வாறு அசுத்தங்களை வெளிப்படுத்துபவர்களுக்கு எதிராக தமது வெறுப்பை பலரும் வெளிப்படுத்தினர். இது தொடர்பான கருத்துக்களை பத்திரிகைகளும் எழுதின.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் 1927 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் இந்தக் குழப்பத்தை சுட்டிக் காட்டியவாறு தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இப்படிப்பட்ட விசயங்கள் இறைவனின் நடைமுறைக்கேற்ப இறை இயக்கங்களுடன் இருந்து வரும். அவற்றை பார்த்து பயந்து விடக்கூடாது. நமது கடமை பணி செய்வதாகும். எதிரிகளின் தீங்கைக் கண்டு அஞ்சுவது நமது வேலையல்ல. எந்தப் பொருள் இறைவனுடையதாக இருக்குமோ அதற்கு இறைவனே வெற்றியை வழங்குவான். தனது பொருளை அல்லாஹ் தானே முன்வந்து பாதுகாப்பான். அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு மனிதனுடைய ஜமாஅத்தாக இருந்தால் அது இந்த அளவு எவ்வாறு நிலைத்திருக்க முடியும்?

இது இறைவனின் இயக்கமாகும். அவனே இதற்கு முன்பும் இவ்வியக்கத்தை பாதுகாத்தான். எதிர்காலத்திலும் அவனே இதை பாதுகாப்பான். இன்சா அல்லாஹ். உயர்வான அமைதி நிறைந்த நற்பாக்கியமுள்ள முன்னேற்றம் நிறைந்த ஒரு காலக்கட்டம் விரைவில் வரவிருக்கின்றது. ஜமாஅத் எவ்வாறு முன்னேறுகிறது என்பதை பார்ப்பேன் என்று கூறுபவர் கூறுகின்றார். எனது இறைவனின் சொல் நிறைவேறுகிறதா அல்லது அந்த நபரது சொல் நிறைவேறுகிறதா என்பதை நானும் பார்ப்பேன்.

பிறகு அந்தக் குழப்பமும் வியக்கத்தக்க வகையில் முடிவுக்கு வந்தது. எவர்களுக்கு அரசு பணியாளர்கள் இவ்விசயத்தில் உதவி செய்து வந்தார்களோ அவர்கள் அந்த அரசாங்கத்திற்கே எதிராக செயல்பட ஆரம்பித்தனர். இறைவனின் வார்த்தைகள் நிறைவேறியதை ஒரு உலகம் கண்டது. இந்த குழப்பம் இறுதியில் மரணித்து விட்டது. மிகவும் மோசமான நிலையில் மரணித்தது.

இப்போதும் கூட ஜமாஅத்திற்கு எதிராக செய்யப்படுகின்ற திட்டங்கள், சூழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு அரசாங்கம் உதவி செய்தால் பிறகு இப்படிப்பட்ட திட்டங்களை செயல்படுத்துவார்கள். அரசாங்கத்திற்கு எதிராகவும் செயல்பட ஆரம்பித்து விடுவர். இதை தான் நாம் பார்த்துள்ளோம்.

அல்லாஹ் ஜமாஅத்தை எல்லா விதமான தீங்குகளிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக! நமக்கு முன்னேற்றத்தைக் காட்டிக் கொண்டே செல்வானாக! நான் குறிப்பிட்டுக் கூறியுள்ள இந்த சஹாபாக்களின் தகுதியை அல்லாஹ் உயர்த்துவானாக! இவர்களது சந்ததிகளை எப்போதும் இவர்களது துஆக்களுக்கு வாரிசாக்குவானாக! இவர்களது பாதங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி செல்வதற்கான நல்வாய்ப்பை இவர்களுக்கு வழங்குவானாக! ஜமாஅத்திலுள்ள எல்லா நபர்களையும் எல்லா விதமான தீங்குகளிலிருந்தும் குழப்பங்களிலிருந்தும் அவன் பாதுகாப்பானாக! அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் வலுவான தொடர்பை நிலைநாட்டுவதற்கான நல்வாய்ப்பை எல்லாருக்கும் வழங்குவானாக!

இன்றும் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். ஜங்க் மாவட்டத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சர்தார் முஹம்மது பர்வானா சாஹிப் அவர்கள் தமது 73 வது வயதில் 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7ம் தேதி வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

அஹ்மது கான் பர்வானா சாஹிப் இவர்களது தந்தையார் ஆவார்கள். இவர்கள ஸேரா என்ற இடத்தில் வாழ்ந்து வந்தார்கள். 1950 களில் இவர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது காலத்தில் இவர்கள் பைஅத் செய்தார்கள். அப்போது ஏறக்குறைய இவர்களுக்கு வயது 10 ஆகும். சிறு வயதிலிருந்தே இவருக்கு தப்லீக் செய்வதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. கடைசி வரை அந்த ஆர்வம் இருந்தது. குறிப்பிடத்தக்க அளவில் அவர்களது உலகக் கல்வி இருக்கவில்லை. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்களின் நூல்களையும் குறிப்பாக இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது நூல்களையும் மிகுந்த ஆழமான பார்வையுடன் இவர்கள் படித்து வந்தார்கள். கிராமப்புறச் சூழலுக்கு ஏற்பவும், அங்குள்ள மக்களது இயல்புக்கு ஏற்பவும் அஹ்மதிய்யத்தின் உண்மை தொடர்பான ஆதாரங்களை இவர்கள் தயார் செய்திருந்தார்கள். அதை உள்ளூர் மொழியான ஜங் மொழியில் எடுத்துக் கூறுவார்கள். அதைக் கேட்பவர்கள் அதனால் சிறந்த தாக்கத்திற்கு ஆளானார்கள். ஜங் ஜமாஅத்தின் தரப்பிலிருந்தும் அவர்கள் பல்வேறு முனாஸராக்களில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டார்கள். தப்லீகில் எந்த அளவு தைரியமாக செயல்பட்டிருக்கின்றார்கள் என்றால் மக்கள் மற்றும் இடம் பற்றி ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. எதிரிகளுக்கு மத்தியில் தயக்கமின்றி அவர்கள் செல்வார்கள். அஹ்மதிய்யத்தின் உண்மையை வெளிப்படுத்திக் கூறுவார்கள். எதிரில் இருப்பவர் பல நேரங்களில் முகம் சுளித்தவாறு தவறான வழிமுறையை பயன்படுத்தினாலும் இந்த விசயமானது ஒருபோதும் இவர்களது தப்லீகிற்கும் உண்மையை அவர்கள் வெளிப்படுத்திக் கூறுவதற்கும் தடையாக இருந்ததில்லை. அவர்களது பகுதியில் வாழ்ந்த பெரும்பாலான மக்கள் இவர்களது பழக்கவழக்கங்களை அறிந்திருந்தனர். இவர்கள் எங்கு இருப்பார்களோ அங்கு எவருக்குமே அஹ்மதிய்யத்திற்கு எதிராக ஆட்சேபனை செய்வதற்கான தைரியம் இருக்காது. தப்லீகிற்காக எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் அவர்களை அழைத்தாலும் அவர்கள் செல்ல மறுப்பு தெரிவித்ததில்லை. மாறாக எல்லா பணிகளையும் விட்டு விட்டு அந்த இடத்திற்குச் சென்று விடுவார்கள்.

இவர்களது ஒரு மகனான அப்துஸ்ஸாபி பரோனா சாஹிப் அவர்கள் செரலியோனில் ஜமாஅத்தின் முபல்லிக் ஆக இருந்து வருகின்றார். இந்த ஒரே மகன்தான் அவர்களுக்கு இருக்கின்றார்கள்.

அவர்கள் எழுதுகின்றார்கள்: ஒருமுறை அவர்கள் என்னை தன்னுடன் அழைத்துச் சென்றார்கள். அந்நாட்களில் முழு இரவும் ஜங்க் வந்துள்ள தனது நண்பர் ஒருவருக்கு அஹ்மதிய்யத்தின் உண்மைக்கான ஆதாரங்களை எடுத்துக் கூறினார்கள். அவர் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் மிகுந்த பொறுமையுடன் பதில் கூறினார்கள். பிறகு அவரிடம் நீங்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளத் தடையாக இருக்கின்ற வேறு ஏதாவது விசயம் இருந்தால் கூறுங்கள் என்று அவரிடம் கேட்டார்கள். கேள்வியின் எல்லா அம்சங்களையும் விளக்கியவாறு பதில் கூறுவார்கள். இந்தத் தொடர் காலை வரை நீடித்தது. முழு இரவும் இவ்வாறே கழிந்தது.

அந்த நபர் தனது பகுதிக்குத் திரும்பிச் சென்ற பிறகு அவர்களது இந்த நண்பர் பைஅத் செய்து விட்டார். பிறகு தனது வீட்டில் உள்ளவர்களுக்கு அவர் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அந்த வீட்டில் உள்ளவர்கள் அந்தக் கடிதத்தை எனக்குக் காட்டினார்கள். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

நான் ஒரு கிராமத்துவாசியைச் சந்தித்தேன். அவர் நாள் முழுவதும் விலங்குகளைப் பராமரிப்பதையே நான் பார்த்து வருகின்றேன். ஆனால் ஓர் இரவில் நான் அவர் கூறிய விசயங்களைக் கேட்டேன். அப்போது அறிவின் ஒரு நதியாக அவரை நான் கண்டேன். இந்த எல்லா அறிவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களை மீண்டும் மீண்டும் படித்ததன் மூலமாகவே அவருக்குக் கிடைத்தது.

இவர்களுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கின்றார்கள். ஒரே மகன் ஜமாஅத்தின் முபல்லிக் ஆக இருக்கின்றார். செரலியோனில் பணிபுரிந்து வருகின்றார். கடந்த வாரம் அங்கு மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது தொடர்பான பணிகளில் ஈடுபட்டிருந்ததாலும் தவிர்க்க முடியாத வேறு காரணங்களாலும் இவர்கள் தந்தையாரைப் பார்ப்பதற்குச் செல்ல முடியவில்லை. தனது தந்தையாரின் ஜனாஸாவில் இவர்களால் கலந்து கொள்ள முடியவில்லை. மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருந்த காரணத்தால் இவர் தமது வீட்டிற்குச் செல்வதற்கான அனுமதியைக் கூட என்னிடம் கேட்கவில்லை.

அல்லாஹ் இவர்களது தந்தையின் விருப்பத்திற்கேற்ப ஜமாஅத்திற்கு தன்னலமற்ற சேவை செய்வதற்கான நல்வாய்ப்பை இவர்களுக்கு வழங்குவானாக! வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள இவருக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! தனது தந்தையாரின் துஆக்களுக்கு இவர்களை வாரிசாக்குவானாக! அல்லாஹ் மர்ஹூமுடன் மன்னிக்கும் தன்மையுடன் நடந்து கொள்வானாக! இவர்களது தகுதிகளை உயர்த்துவானாக! இவர்களுடன் தொடர்புடைய அனைவருக்கும் அழகிய பொறுமையை கடைபிடிப்பதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **15.02.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456